**தலைப்பு 159 – சுற்றுலாத்துறை அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுற்றுலாத்துறை அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, சுற்றுலாத்துறை அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது**.** இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/3 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு செலவின விடயத்திற்கான மொத்த தேறிய நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினங்களுக் கிடையிலான வேறுபாடுகள் தேறிய நிதியேற்பாட்டில் நூற்றுக்கு ஐந்து சதவீதம் அல்லது ரூபா 10,000 என்ற பெறுமதியில் அதிகரித்த செலவின விடயத்திற்கான வேறுபாட்டிற்கு காரணம் ACA-2(ii) படிவத்தில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆறு செலவின விடயத்திற்குரிய | தவறினால் உரிய தகவல்கள் ACA- (ii) படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படுவது தவிர்க்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முரண்களை காட்டிய சேமிப்புக்கள் ரூபா 4,579,809 இற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 02 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,933,504 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் நிதிப்பிரமாண இலக்கம் 109 இன் கீழ் வருகின்ற நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் அது அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | விபத்துக்களுக்குரிய விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த மையால் நட்டம் மற்றும் கைவிடல்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | விபத்துக்களுக்குரிய விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும் சம்பவங்களின் எண்ணிக்கை அல்லது எதிர்வரும் ஆண்டுகளில் கணக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இழப்புக்கள் மற்றும் கைவிடல்கள் அந்த கூற்றில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 2,831,533 தொகை ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கில் பெறுவனவுகள், வருமான மல்லாத பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தாமத வழுவினால் தவறவிடப்பட்டிருந்ததுடன் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச் செயலாற்றல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மொத்த வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 307,257,930 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 323,212,722 ஆக ரூபா 15,954,792 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மொத்த வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 307,257,930 ஆக இருக்க வேண்டியிருந்ததுடன் தவறினால் அது கட்டுநிதி அல்லாத பெறுவனவுகள் ரூபா 2,831,533 | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதியும் சேர்க்கப்பட்டு ரூபா 323,212,722 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. ஏற்பட்ட தாமத வழுக்கள் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என குறிப்பிடுகின்றோம். | |
| (இ) | ஐந்து செலவின விடயங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 481,111 செலவினம் பிழையான செலவின விடயத்தில் வகைப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தது. | கணனிக்காக தேவையான மென்பொருள் உள்ளடக்குதல் அந்த இயந்திரத்தை அபிவிருத்தி செய்யப்படுகின்றமையால் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரண செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக கணனி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தவணை சேவை மற்றும் எரிபொருள் பற்றாக்குறையினால் பிழையான செலவின விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்கும் என குறிப்பிடுகின்றோம். வாகனங்களை பழுதுபார்த்தல் மீண்டெழும் பழுதுபார்த்தல்கள் அல்லாதிருந்ததுடன் நீண்ட காலத்திற்கு தாக்கமளிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்களாக இருந்தமையால் வாகன பராமரிப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

**1.6.2.1 நிதியல்லா சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லா சொத்து பட்டோலையின் பிரகாரம் மரத்தளபாடங்களின் ஆரம்ப மீதி ரூபா 60,380 தொகையும், அகற்றல்களாக ரூபா 80,380 தொகையும் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அவ்வாறான ஒன்றுசேர்த்தல்கள் அல்லது அகற்றுதல்கள் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மெத்தை இருப்புக்களுக்காக கழிவு பெறப்பட்டிருந்ததுடன் கழிவுடன் விலை ரூபா 60,380 தொகை, வழங்குனருக்கு செலுத்தப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 80,380 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் அந்த கொடுக்கல் வாங்கலை கணக்கீடு செய்யும் போது ரூபா 80,380 ஐ அகற்றும் நிரலின் கீழ் மற்றும் ரூபா 60,380 கொள்வனவு செய்தலின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பௌதீக ரீதியில் அகற்றல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதியல்லா சொததுக்களின் பட்டோலை சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2.2 நிதிச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2021.12.31 இல் உள்ளவாறான நிலைமை அறிக்கையில் அத்திகதியில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகளின் உள்ளபடியான பெறுமதி ரூபா 301,981 ஆக இருந்த போதிலும் அது ரூபா 104,560 ஆக ரூபா 197,421 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகளின் பெறுமதி தவறினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான வழுக்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளபடியான பெறுமதி சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2.3 கட்டுநிதி இணைக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கட்டுநிதி இணைக்கக் கூற்றின் மீதி ரூபா 2,169,345 மறைப் பெறுமதியாக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 13,785,447 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி இணைக்கக் கூற்றின் மீதி தவறினால் பிழையான பெறுமதியாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்தத் தவறை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுநிதி இணைக்கக் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) அமைச்சு புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 5,281,832 மற்றும் ரூபா 5,344,800 ஆக இருந்ததுடன் களஞ்சியத்தின் 52 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்ட பெறுமதியின் பிரகாரம் அது முறையே ரூபா 6,404,563 மற்றும் ரூபா 4,630,920 ஆகும். இந்த வேறுபாடுகள் கட்டுநிதி இணைக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளது. தாமத வழுக்களினால் ரூபா 1,222,731 வேறுபாடு கட்டுநிதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | அமைச்சு புத்தகங்களின் பிரகாரமும், திறைசேரி புத்தகங்களின் பிரகாரமும் ஆன வேறுபாடுகள் கட்டுநிதி இணைக்கக் கூற்றில் குறிப்பிடப்படல் வேண்டும். |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 307,257,927 ஆக இருந்த போதிலும் அது ரூபா 306,002,313 ஆகவும், ரூபா 234,681,856 ஆன செயற்பாட்டு | கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக செலவினங்களை வரையறுக்குமாறு விதிக்கப்பட்ட | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 234,410,308 ஆகவும், ரூபா 71,337,617 தொகையான முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 71,592,005 ஆகவும் பிழையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைகள் பின்பற்றப்பட்டமையால் சில செலவின விடயங்களில் நிதியேற்பாட்டை சேமிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும், மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டு பணம் ஆண்டில் செலவினத்திற்காக போதியளவாக இல்லாதிருக்கின்ற போது சேமிக்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளை மாற்றுதல் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களுக்கிடையே ரூபா 143,200 வேறுபாடு செப்தெம்பர் மாதம் முதல் காணப்பட்டிருந்த போதும், மாதாந்த அமைச்சின் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் புத்தகங்களை இணக்கம் செய்யாமையால் இந்த வேறுபாடு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியலும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்பு மீதிகளை இணக்கம் செய்யும் போது காணப்பட்ட ரூபா 143,200 தொகை விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் (437) ஏனைய அமைச்சிற்கு செலவு வைக்க வேண்டிய தொகையாகும். தவறுதலாக அந்த தொகை சுற்றுலாத்துறை அமைச்சின் தலைப்பின் இலக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகை 2022 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் கணக்கு பொழிப்பின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. | மாதாந்தம் அமைச்சின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்கள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக 11 உத்தியோகத்தர்களின் இடர் கடன் மீதியில் உள்ளடக்கப்பட்ட தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கும், அங்கத்தவர் கடன் பதிவேட்டிற்கும் இடையே கூட்டுமொத்தமாக ரூபா 433,410 வேறுபாடு காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். அங்கத்தவர் கடன் பதிவேட்டின் பிரகாரம் சரியான மீதி காண்பிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல்கள் எழுதும் போது தாமத வழுவின் காரணமாக எண்ணிக்கை பிழையாக அச்சிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் எதிர்வரும் காலங்களில் இவ்வாறு ஏற்படாமல் இருக்கும் என குறிப்பிடுகின்றோம். | தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்கும், அங்கத்தவர் கடன் பதிவேட்டு மீதிக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படாதிருத்தல் வேண்டும். |
| (இ) | அங்கத்தவர் கடன் பதிவேட்டின் பிரகாரம் 2021 சனவரி 01 ஆந் திகதி உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ஆரம்ப கடன் மீதியின் தவணைப் பண அறவிடல் குறைக்கப்பட்ட பின்னர் மேலும் அங்கத்தவர் கடன் பதிவேட்டில் ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மீதியாக அறிக்கையிடப்பட்ட பெறுமதிக்கு இடையே ரூபா 209,260 எண் கணிதரீதியான வேறுபாடு காணப்பட்டது. | உரிய வேறுபாடுகள் அங்கத்தவர் கடன் பதிவேட்டில் சரிசெய்யப்படும் என குறிப்பிடுகின்றோம். | எண் கணித ரீதியான வழுக்கள் அகற்றப்படல் வேண்டும். |

**1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்ததுடன் அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்குரிய குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் ‘‘ஏசீஏ-பீ’’ படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் திட்டமிடப்பட்ட கட்டுநிதி ரூபா 574.3 மில்லியனாக இருந்ததுடன் பெறப்பட்ட கட்டுநிதியின் அளவு ரூபா 294.5 | நாட்டில் காணப்பட்ட கஷ்ட நிலைமையின் காரணமாக பொதுத்திறைசேரியால் வரையறுக்கப்பட்ட | கட்டுநிதி திட்டம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் ஆனமையால் கிடைத்த கட்டுநிதி வருடாந்த திட்டமிடலில் 51 சதவீத அளவாக இருந்தது. மாதாந்தம் திட்டமிடப்பட்ட மற்றும் கோரப்பட்ட கட்டுநிதியின் பெறுமதிகளை பரீட்சித்த போது 2021 திசெம்பர் மாதத்திற்காக திட்டமிடப்பட்ட கட்டுநிதி ரூபா 56.8 மில்லியனாக இருந்ததுடன், கோரப்பட்ட அளவு ரூபா 94.5 மில்லியன் ஆகும். | தேவைப் பணிகளுக்காக மாத்திரம் கட்டுநிதி விநியோகிக்கப்பட்டமையால் இந்த வேறுபாடு எழுந்திருந்தது. ஆண்டில் அனேக காலம் அலுவலகங்கள் மூடப்பட்டமை மற்றும் ஆண்டின் இறுதிக்கு முன்னர் பற்றுச்சீட்டுக்கள் தீர்க்கப்பட வேண்டியிருந்தமையால் திசெம்பர் மாதத்தின் போது கொடுப்பனவுகளுக்காக கணிசமான பட்டியல்கள் கிடைத்திருந்தமையால் அதனை தீர்ப்பதற்கு நிதியேற்பாடுகளின் கீழ் கட்டுநிதி கோரல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது இனங்காணப்பட்ட குறித்துரைத்த திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயாரிக்காமையால் 20 செலவின விடயங்களுக்குரியதாக 05 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 15,838,637 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக வீட்டிலிருந்தே வேலை செய்தல், வெளிநாட்டு பயணங்கள் வரையறுக்கப்பட்டமை போன்ற காரணங்களினால் சில மீண்டெழும் செலவினங்களில் குறைவு ஏற்பட்டமை, ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் போன்றவற்றை தற்காலிகமாக கைவிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டமையால் சில மூலதன செலவினங்களின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டமை போன்ற | தேவையினை இனங்கண்டு குறித்துரைத்த திட்டமொன்றின் கீழ் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணங்களின் அடிப்படையில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 13 செலவின விடயங்களில் ஆரம்ப செலவின மதிப்பீட்டினை விட திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு 04 சதவீதம் முதல் 138 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரித்தும், 24 செலவின விடயங்களில் ஆரம்ப செலவின மதிப்பீட்டை விட திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு 04 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் குறைத்தும் காண்பித்திருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சில செலவின விடயங்களில் செலவினங்களை வரையறுக்குமாறு விதிக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்கியமையால் சில செலவின விடயங்களின் நிதியேற்பாட்டை சேமிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும் மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டு பணம் ஆண்டில் செலவிடுவதற்காக போதியளவில் இல்லாதிருக்கின்ற போது சேமிக்கப்பட்ட நிதியேற்பாடுகளை மாற்றுதல் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (இ) | 18 மீண்டெழும் செலவின விடங்கள் மற்றும் ஒரு மூலதன செலவின விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் முறையே ரூபா 92,293,000 மற்றும் ரூபா 12,420,000 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 104,713,000 மேலதிக நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாட்டு மாற்ற சதவீதம் ஆரம்ப மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடும் போது 03 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தமையின் காரணமாக நிதிப் பிரமாணம் 50 இன் | - மேற்படி - | தேவையினை இனங்கண்டு குறித்துரைத்த திட்டத்தின் கீழ் சரியாக மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். |

பிரகாரம் மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படாமை வெளிப்படுத்தப்பட்டது.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் ஆண்டின் இறுதியின் போது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் மேலும் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருக்குமாயின் மாத்திரம் கடப்பாடுகளுக்கு உடன்பட முடியுமாக இருந்த போதும் அமைச்சின் 12 செலவின விடயங்களில் சேமிப்பினை விஞ்சி கூட்டுமொத்தமாக ரூபா 6,322,913 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | அமைச்சின் 12 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் கட்டாயம் செய்யவேண்டிய அத்தியவசிய மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த செலவினங்கள் சிலவற்றை செய்தமையால் நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரியதாக அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் கீழ் காண்பிக்கப்படாத ரூபா 790,247 தொகையான பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா 790,247 பெறுமதி கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு பதிவேட்டில் குறிப்பிடுதல் தவறினால் கைவிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | அரச கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/3 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கடப்பாட்டு இலக்கத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் | தவறினால் குறிப்பிடப்படாதிருந்ததுடன் அந்த தவறு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 116 கடப்பாடுகள் அதன் பிரகாரம் இலக்கிடப்பட்டிருக்க வில்லை.

## 2.4 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 04 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 133,000 முற்பணம் தீர்த்தல் 35 நாட்கள் முதல் 72 நாட்கள் வரையிலான காலவீச்சிலான தாதத்தில் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும் பெறப்பட்ட முற்பணத்தை தீர்ப்பதற்கு முன் 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 194,000 முற்பணம் மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தமை யினாலும், உத்தியோகத்தர்கள் இடையிடையே சேவைக்கு அழைக்கப்பட்டமையாலும் குறித்துரைத்த காலத்தின் போது முற்பணத்தை தீர்த்தல் தாமதமாகியிருந்த போதும் அப்பெறுமதி ஆண்டின் இறுதியின் போது தீர்க்கப்பட்டுள்ளது. அமைச்சினதும் அமைச்சு அலுவலகத்தினதும் அத்தியவசிய மற்றும் அவசர கடமைகளுக்காக கட்டுநிதி தீர்த்து வைப்பதற்கு முன்னர் மீண்டும் கட்டுநிதி விநியோகிப்பதற்கு ஏற்பட்டிருந்ததுடன் அந்த கட்டுநிதியை மிக விரைவில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் தடுக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(4) | 2021 ஒக்தோபர் 22 ஆந் திகதி திடீர் விபத்திற்கு உட்பட்ட ஜீப் வண்டி தொடர்பாக விபத்து ஏற்பட்டு மூன்று மாதங்களுக்குள் நட்ட இழப்பு தொடர்பாக பூரணமான அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | WP KY-7243 வண்டிக்கு உரியதாக நிதிப்பிரமாணம் 104(3) இன் கீழ் நட்டம் தொடர்பான ஆரம்ப அறிக்கை 2021.10.27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. விபத்திற்குரிய வண்டியின் இறுதி அறிக்கை பெற்று உரிய நட்டத்தை கணிப்பிடுவதற்காக வாகனம் பழுதுபார்க்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தமையால் இறுதி அறிக்கை தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதத்திற்குரிய வங்கி இணக்கக் கூற்று அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய 09 மாதங்களின் வங்கி இணக்கக்கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் போது 30 நாட்கள் முதல் 105 நாட்கள் | நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக வீட்டிலிருந்து கடமைகளை மேற்கொள்ளல் மற்றும் வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்களை அலுவலகத்திற்கு வரவழைத்தல் மற்றும் 2021 ஒக்தோபர் மாதத்தின் போது உரிய விடய உத்தியோகத்தர் இடமாற்றலாகிச் சென்று | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரையான தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அதற்கு பதிலாக புதிய உத்தியோகத்தர் வருகை தந்தமை போன்ற விடயங்கள் காரணமாக வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு முதல் உரிய பிரகாரம் வங்கி இணக்கக் கூற்று தயாரித்து சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | நிதிப்பிரமாணம் 396 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்து 08 மாதங்கள் முதல் 13 மாதங்கள் வரை பழைய கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 301,981 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு புதிய காசோலைகள் விநியோகித்தல் அல்லது காசோலைகளின் காலத்தை நீடித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஆ) | 2006 பெப்ரவரி 21 ஆந் திகதிய CSA/2/3/4 ஆம் இலக்க சனாதிபதி சுற்றறிக்கை | i. அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருக்கு ஒரே தடவையில் வெளிநாட்டு பயணங்களில் ஈடுபட முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஒக்தோபர் 05 முதல் 08 வரை பிரான்சில் நடைபெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக அந்த இருவரும் பங்குபற்றியிருந்தனர். | 2021.10.03 ஆந் திகதி முதல் 2021.10.12 ஆந் திகதி வரை பிரான்சில் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சருடன் முன்னாள் அந்த அமைச்சின் செயலாளரை உள்ளடக்கிய தரப்பினர் பங்குபற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தனர். சனாதிபதி செயகத்தினால் விநியோகிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக குழுவொன்று பங்குபற்றுமிடத்து அந்தக் குழுவின் தலைமைத்துவ அங்கத்தவரின் வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கும் அதிகார தரப்பினரிடம் இருந்து குழுவின் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | சகலருக்கும் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நாட்டிலிருந்து வெளியே செல்வதற்கு 2021.09.30 ஆந் திகதிய சுற்றுலாத் துறை அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு 2021.10.01 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதியால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | |
| ii. | வெளிநாட்டு பயணத்திற்காக பங்குபற்றுதலை குறைக்க வேண்டி இருந்தமை அறிவிக்கப்பட்ட போதிலும் சுற்றுலா ஆலோசனை குழுவின் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினரும் மேற்கூறப்பட்ட சுற்றுலாவில் பங்குபற்றியிருந்தார். | சுற்றுலா மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல், இலங்கை சுற்றுலாதுறை மேம்பாட்டு பணியகத்தின் விடயப் பரப்பிற்கு உரியதாக இருந்தமையால் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவாகின்ற செலவினம் இதுவரையில் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் மூலம் செய்யப்பட்டிருந்தது. அதனால் மேற்கூறப்பட்ட கூற்றுலாவிற்காகவும் அவ்வாறே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| iii. | இலங்கை சுற்றுலாவிற்காக திறக்கப்பட்டுள்ளமையை பிரான்ஸ் சுற்றுலா நிறுவனங்களுக்கு அறிவித்தல் வழங்குவதற்காக 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி மேம்படுத்தல் மாலை நிகழ்சிகளை (Promotional Evining) நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனினும் அமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் அன்றைய | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தினம் கலந்துரையாடல் நடாத்தப்படாமல் 2021 நவம்பர் 09 ஆந் திகதி மீண்டும் நடாத்தப்பட்டிருந்தது. அதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர், சுற்றுலா ஆலோசனைக் குழுவின் இணைப்பாளர் மற்றும் மேம்பாடுத்தல் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். | | |
| (இ) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் "அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை" | i. | அமைச்சரின் உதவி பதவியணியினரின் மேலதிக நேர கொடுப்பனவு உரித்துள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை விஞ்சி பதவியணிக்கு உரித்தற்ற நபர்கள் இருவருக்காகவும் மீளாய்வாண்டில் ரூபா 663,918 மேலதிக நேரப் படி செலுத்தப் பட்டிருந்தது. | அமைச்சு பதவியணியினருக்கு உரியதாக இருந்த போதும் அவர்களின் கடமை தன்மையின் பிரகாரம் கௌரவ சுற்றுலாத்துறை அமைச்சர் பங்குபற்றுகின்ற கூட்டங்கள் / கலந்துரை யாடல் / நிகழ்ச்சித் திட்டங்களை மேவுகை செய்கின்றமையால் அவர்கள் அமைச்சு அலுவலகத்தில் இருக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் அவர்களின் மேலதிக கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் போது அவற்றை அமைச்சு பதவியணியினரின் மேலதிக கோரிக்கையுடன் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| | | ii. | அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களினதும் நிறுவன அலுவலகங்களை இயலுமான வரை அரசாங்கத்தினதோ அல்லது அரச கூட்டுத்தாபன கட்டிடங்களிலோ நடாத்த | சுற்றுலாத்துறை அமைச்சிற்காக செத்சிறிபாய I அல்லது II கட்டத்தில் இடவசதிகள் ஒதுக்குவதற்கு இயலுமை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக MT/ADM/01/12(iv) ஆம் இலக்க 2020.09.15 ஆந் திகதிய கடிதம் மூலம் விசாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக போதியளவான | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றுலாத்துறை அமைச்சு யோர்க் வீதியில், எசெட் ஆர்க்கேட் பெயரில் உள்ள தனியார் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. மேலும் அமைச்சு அலுவலகம் மேற்கூறப்பட்ட கட்டிடத்தில் அல்லது இடமொன்றில் இல்லாமல் உலக வர்த்தக நிலையத்திலிருந்து பெறப்பட்ட அலுவலகத்தில் வாடகைக்கு நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. ஏற்பட்ட வாடகைச் செலவினம் ரூபா 43,317,720 ஆகும். | இடவசதிகள் காணப்படாதிருந்ததாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2020.09.18 ஆந் திகதிய MUD/ADM/EST/03/ General-01 ஆம் இலக்க கடித்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. 2020.10.19 ஆந் திகதியில் நடைபெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2020.12.15 ஆந் திகதி முதல் சுற்றுலாத்துறை அமைச்சு இலக்கம் ஈ 51, யோர்க் வீதி, கொழும்பு 01 என்ற இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | |
| (ஈ) | அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை<br>---------------------------- | | | |
| (i) | 2006 நவம்பர் 18 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை | மேல் மாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லம் தற்காலிக அடிப்படையில் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 11 மாதங்களுக்காக அந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக அமைச்சினால் நீரப் பாவனைக்காக ரூபா 13,715 முதல் ரூபா 71,118 வரையான வீச்சில் செலவிடப்பட்டிருந்தது. மேலும் மின்சார பாவனைக்காக அந்த காலப்பகுதியில் ரூபா 2,328 | இந்த இல்லம் அரசிற்குச் சொந்தமான வீடாக இருந்தமையால் அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 2006/22 இன் பிரகாரம் அமைச்சரிடமிருந்து 12.5 வீத தொகை வீட்டு வாடகையாக அறவிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் ரூபா 258,753 வரையான வீச்சில் செலவினம் செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2010 மே 24 ஆந் திகதிய 2010/80 ஆம் இலக்க சுற்றறிக்கை | • ஊடக செயலாளருக்கு 218 லீற்றர் ஆக வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனத்திற்காக பெறக்கூடியதாக இருந்த மாதாந்த எரிபொருள் படிக்கு மேலதிகமாக ரூபா 40,549 படி செலுத்தப்பட்டிருந்தது. | முன்னாள் கௌரவ அமைச்சரின் ஊடாக செயலாளருக்காக மாதாந்த எரிபொருள் படிக்கு மேலதிகமாக எந்தவொரு கொடுப்பனவிற்காகவும் உறுதிச்சீட்டு நிர்வாக பிரிவின் மூலம் சமர்ப்பிக்கப்படாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | கணக்கு பிரிவுகளுடன் பரீட்சித்ததன் பின்னர் பதில் வழங்க வேண்டியிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | • அமைச்சரின் பிரத்தியேக செயலாளரின் சாரதிக்கு மாதத்திற்கு ஆகக்கூடிய மேலதிக மணித்தியாலம் 125 ஆகவும், இணைப்புச் செயலாளர், ஊடக செயலாளர் மற்றும் பொதுமக்கள் இணைப்பு உத்தியோகத்தர் போன்ற உத்தியோகத்தர்களின் சாரதிகளுக்கு மாதத்திற்கு ஆகக்கூடிய மேலதிக மணித்தியாலம் 100 ஆகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த ஆகக்கூடிய எல்லையினை விஞ்சி செலவினத்தை செய்வதற்கோ அல்லது செலவாகின்ற செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கோ பட்டியல் சமர்ப்பிக்காதிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த சாரதிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆகக்கூடிய மணித்தியால எல்லையை விஞ்சி மீளாய்வாண்டின் போது 1500 | 2020 ஆம் ஆண்டில் கொவிட் பரவலுடன் இந்த நாட்டில் சுற்றுலாவிற்காக சுற்றுலா பிரயாணிகள் வருகை தருதல் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது சுற்றுலாக் கைத்தொழிலில் இருந்து உழைக்கப்படுகின்ற வருடாந்த வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் கள பிரயாணங்களுக்காக அமைச்சரின் பிரத்தியே செயலாளர், ஊடகச் செயலாளர், இணைப்பு செயலாளர், பொதுமக்கள் இணைப்பு உத்தியோகத்தர்கள் போன்ற உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். அதனால் அந்த உத்தியோகத்தர்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள சாரதிகளும் உரிய சந்தர்ப்பங்களுக்காக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மணித்தியாலங்களுக்காக ரூபா 167,943 செலுத்தப்பட்டிருந்தது. | அதனால் மேலதிக நேரப் படி செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஆகக்கூடிய எல்லையின் கீழ் மேலதிக நேரப் படி செலுத்தப்பட்டிருந்தது. | |
| (iii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க சுற்றறிக்கை | • சகல எரிபொருள் பரீட்சிப்பின் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது கிலோமீற்றர் 25,000 தூர அளவு ஓடியதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பாக பிரதான பழுதுபார்த்தல்கள் மேற்கொண்டதன் பின்னர் போன்ற விடயங்களுக்கிடையே முதலாவதாக நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 16 ஆந் திகதி வரையிலும் 15 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சில வாகனங்கள் 2022.01.15 ஆந் திகதி வரையில் 25,000 கிலோமீற்றர் பூர்த்தி செய்யாதிருந்தமையால் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படாதிருந்த துடன் WP CAV-4004 வாகனம் அமைச்சுக்கு கையேற்கப்பட்ட திகதி முதல் பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்டிருந்தமையால் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. ஏனைய வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனையை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| | | • எரிபொருள் அளவு மற்றும் ஓடப்பட்ட தூரத்தின் அளவு என்பன சம்பவத் திரட்டு புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட புத்தகத்தில் நாள்தோறும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 15 வாகனங்களுக்கு உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 15 வாகனங்கள் கடந்த ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமையினால் (2021) மாதத்திற்கு வரையறுக்கப்பட்ட வகையில் ஓடப்பட்டிருந்த மையினால் அந்த தினங்களில் மாத்திரம் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் சம்பவத் திரட்டு புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுற்றுலா உபாய வழிகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சிற்கு உரியதாக காணப்படும் போது 2019 நவம்பர் 24 ஆந் திகதி திடீர் விபத்திற்கு உட்பட்டிருந்த ஜீப் வண்டியை பழுதுபார்ப்பதற்காக டீசல் அன்ட் மோட்டர்ஸ் இன்ஜினியரிங் பீ.எல்.சீ கம்பனிக்கு ரூபா 20,816,808 கிரயத்தில் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கும் போது 2021 யூலை 22 ஆந் திகதி சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், காப்புறுதி நிறுவனத்தின் பிரகாரம் இந்த வண்டியின் சந்தைப் பெறுமதியான ரூபா 15,500,000 தொகையை பழுதுபார்த்தல் அல்லது பொருத்துதலை பூர்த்தி செய்வதற்காக ரூபா 9,300,000 மாத்திரம் செலுத்துவதற்கான இயலுமை இருந்ததாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தமையால் நிலுவையான பழுதுபார்த்தல் செலவினத்தின் பெறுமதி ரூபா 11,516,808 பொறுப்பொன்று அமைச்சிற்கு கையேற்கவேண்டி ஏற்பட்டிருந்தது. | வண்டியின் சந்தைப் பெறுமதி மற்றும் பழுதுபார்த்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வண்டி பழுதுபார்த்தல் இலாபகரமாக இருந்தமையால் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சின் மூலம் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு 2021.10.12 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. வாகனத்தை சுற்றுலாத்துறை அமைச்சிற்கு கையேற்ற சந்தர்ப்பம் வரையில் பழுதுபார்த்தலுக்கு அனுப்பப்பட்டிருந்தது. | அமைச்சிற்கு ஏற்படக் கூடிய நட்டத்தை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 மே 12 ஆந் திகதிய பீஈடீ/ஆர்ஈடீ/ஆர்ஈஜீ/02/சீசீ/01/2021 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு 2021 யூன் 30 ஆந் திகதி வரையான காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் 2020 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நடமாடும் வரையறை விதித்தமையினால் பதவியணியினர் இடையிடையே சேவைக்கு அறிக்கையிட்டிருந்ததுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற தாமதங்கள் இதற்காக அநேக காரணமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) விபத்திற்குட்பட்டிருந்த வாகனமொன்றின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் முகவர் நிறுவனத்தினால் மேற்கொள்ளுமாறு 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதி சுற்றுலாத்துறை அமைச்சு செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் வேறொரு தனியார் கராஜிற்கு இந்த | முகவர் நிறுவனத்தை விட விரைவாக பழுதுபார்த்தல் மேற்கொள்கின்றமையால் தனியார் நிறுவனத்திற்கு பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் பின்னர் வாகனம் கழற்றி பழுதுபார்த்தல் மேற்கொள்ளும் போது மீண்டும் 03 மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தின் போது மீண்டும் வேறொரு நிறுவனத்திற்கு | முறையான பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனத்தை பழுதுபாத்தல் கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,492,754 செலவினம் செய்யப்பட்டிருந்தது. அது டொயட்டா லங்கா (தனியார்) கம்பனியின் மதிப்பீட்டினை விட ரூபா 222,592 அதிகரித்த விலையாக இருந்தது. | மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்க முடியாதிருந்தது. மேலும் இந்த வாகன விபத்தின் பின்னர் வண்டி இடர் நிலையில் பழுதுபார்ப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்தமையால் பெறுகைகளுக்காக வாகனத்திற்குரிய மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக நிறுவனத்திற்கு எடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பம் காணப்படவில்லை. | |
| (ஆ) | அமைச்சின் கெப் வண்டியொன்றை பழுதுபார்ப்பதற்காக 2021 யூலை 09 ஆந் திகதி கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும் கூறுவிலைகள் சமர்ப்பித்த 02 நிறுவனங்கள் 2021 யூன் 25 மற்றும் 2021 யூலை 05 ஆந் திகதிகளில் கூறுவிலைகள் சமர்ப்பித்தமையின் காரணமாக கூறுவிலைகளை கோருவதற்கு முன்னர் கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பெறுகைக்கு தேவையான காலத்திற்கு முன் நிறுவனங்களுக்கு தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | உரிய கெப் வண்டியை பழுதுபார்ப்பதற்காக கூறுவிலைகள் கோருவதற்கு முன்னர் சாரதியால் உரிய வாகனம் அந்த நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசோதிக்கப்பட்டதன் பின் வழங்கப்பட்ட கூறுவிலைகள் கோவையில் இணைக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களிலிருந்து பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாதிருந்த மையை தயவுடன் அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கெப் வண்டியொன்றை பழுதுபார்ப்பதற்காக தேவையான உதிரிப்பாகங்களில் 05 வகை 2021 நவம்பர் 17 ஆந் திகதி முகவர் நிறுவனத்திலிருந்து ரூபா 169,891 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் 05 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமல் அமைச்சின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | தற்போது இந்த உதிரிப்பாகங்களை பயன்படுத்தி பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தேவையற்ற தாமதங்களை தவிர்த்தல் வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாண பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லம் சுற்றுலாத்துறை அமைச்சருக்கு தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக ரூபா 874,960 செலவிடப்பட்டு சோபா செட்டி, கட்டில் போன்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், சுற்றுலாத்துறை அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 9 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையொன்று தேவையாக இருந்தமையின் | அந்த பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படும் வரையில் வேறொரு வீடொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு கௌரவ அமைச்சர் எதிர்பார்த்தமையினால் மேல்மாகாண சபையின் பிரதம அமைச்சரிற்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்தை சுற்றுலாத்துறை அமைச்சருக்கு வழங்குமாறு மேல் மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு 2021.01.18 ஆந் திகதிய MT/ADM/01/12(v) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்பட்ட | தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக புதிய கொள்வனவுகளோ அல்லது உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்பட்ட பொருட்களை அகற்றுதலோ மேற்கொள்ளப் படாதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காரணத்தினால் அதில் குடியிருப்பதற்கு பொருத்தமற்றதாக குறிப்பிட்டு அமைச்சரால் தமக்கு உரித்தான உத்தியோகபூர்வ இல்லம் நிராகரிக்கப்பட்ட போதிலும் அந்த உத்தியோகபூர்வ இல்லம் 2021 யூன் 29 ஆந் திகதி வரையில் அரசாங்க சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நீதி அமைச்சருக்கு குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. | பொருட்கள் மேல்மாகாண சபைக்கு உரியதாக இருந்தமையால் கௌரவ சுற்றுலாத்துறை அமைச்சரால் அகற்றப்பட்ட பொருட்கள் மீண்டும் அந்த மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், ஸ்டான்டுடன் ஓர்கன் ஒன்று முன்னாள் அமைச்சருக்கு சொந்தமான தனிப்பட்ட பொருளாக இருந்தமையால் அது பொருத்தமான சிறுவர் அல்லது முதியோர் இல்லத்திற்கு கையளிப்பதற்காக சமூக சேவைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பொருட்களை அகற்றுதல் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு கையளித்தல் மேல் மாகாண சபையின் மாகாண நிர்வாக, பொருளாதார மேம்பாட்டு மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | |

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் பணம், | இது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் போன்றவை, கையேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல், அவ்வாறில்லையாயின் அரசாங்கத்தின் பணம், முத்திரை அல்லது பொருட்கள் போன்றவை பகிர்ந்தளித்தல் அல்லது விநியோகித்தலுடன் தொடர்புடைய நிர்வாக ரீதியிலான பொறுப்புக்களை உடைய உத்தியோகத்தர்களும், அரசாங்கத்தின் கணக்கிற்குரிய உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்துகின்ற, காசோலைகளில் கையொப்பமிடுகின்றவர்களும், சுயமாக கடமை நடவடிக்கைகளை பொறுப்புடன் நிறைவேற்றுமிடத்து 612 ஆம் அத்தியாயத்தின் பிரகாரமான அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சின் 18 உத்தியோதக்தர்கள் அவ்வாறு பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது அது தொடர்பாக மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |

## 3.5 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது மூன்று வாகனங்களுக்கு ஏற்பட்ட ரூபா 25,196,889 கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களின் விபத்துக்களுக்குரிய ரூபா 22,052,349 தொகையொன்று கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் 05 ஆந் திகதி வரையிலும் உரிய காப்புறுதி நிறுவனத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது மூன்று வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக ரூபா 22,052,349 தொகையொன்று இழப்பு நட்டமாக அறவிடுவதற்கு உரிய தகவல்கள் நிர்வாகப் பிரிவின் மூலம் பேணிச் செல்லப்பட்ட கோவைகளில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. | விபத்து தொடர்பான முறையான அறிக்கை பேணிச் செல்லப்பட வேண்டும். |